ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2012/22 - 2017 මාර්තු මස 29 වැනි බදාදා - 2017.03.29
2012/22 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: WLP/LAN/2/3/21.
காணி அமைச்சின் இல.: 4-3/12/2012/pc/172.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் வெலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின், இல. 394B, பனாட்டியன மேற்கு கிராம அலுவலர் பிரிவின் நில அளவை அதிகாரியினால் 2015.04.28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப கிராமப்பட இல. 2597 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.2642 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய காணித்துண்டுகள் 03 இனதும் விபரங்கள் பின்வருமாறு:-

**1. துண்டு இல. 01**
காணியின் பெயர்: போபகே வத்த; விபரம்: விளையாட்டு மைதானம்; உரிமை கோருவோர்: வணக்கத்துக்குரிய கணங்கே விமலஞான தேரர் விகாரை அதிபதி, கணங்கே ரஜமகா விகாரை, கனங்கெ கடவீதி; விஸ்தீரணம்: 0.0045 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**
காணியின் பெயர்: போபகே வத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், தற்காலிகக் கட்டிடத்தையும், சுமார் 30 - 40 வயதான தென்னை மரம் 03 இனையும், சுமார் 40 வயதான பலா மரம் 01 இனையும், 20 - 30 வயதான பலா மரம் 04 இனையும், சுமார் 10 வயதான மா மரம் ஒன்றினையும் கொண்டுள்ளன; உரிமை கோருவோர்: வணக்கத்துக்குரிய கணங்கே விமலஞான தேரர் விகாரை அதிபதி, கணங்கே ரஜமகா விகாரை, கனங்கே கடவீதி; விஸ்தீரணம்: 0.0290 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 03**
காணியின் பெயர்: போபகே வத்த; விபரம்: வீட்டுத் தோட்டம், சுமார் 30 - 40 வயதான பலா மரம் 03 இனையும், சுமார் 30 வயதான மா மரம் 01 இனையும், 5 - 10 வயதான தென்னை மரம் 02 இனையும், சுமார் 10 வயதான அல்பீஸியா மரம் ஒன்றினையும், சுமார் 30 வயதான ஈரப் பலா மரம் ஒன்றினையும், சுமார் 10 வயதான அட்டோனியா மரம் ஒன்றினையும் கொண்டுள்ளன; உரிமை கோருவோர்: வணக்கத்துக்குரிய கணங்கே விமலஞான தேரர் விகாரை அதிபதி, கணங்கே ரஜமகா விகாரை, கனங்கே கடவீதி; விஸ்தீரணம்: 0.0570 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட

காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, வெலிபிட்டிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

துசாரி பீ. சூரியஆரச்சி,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
வெலிபிட்டிய.

பிரதேச செயலகம்,
வெலிபிட்டிய,
2017, மாச்சு 24.

4 - 301